**OS. 03/2023**

**நாள். 02.04.2026**

**பி.வா.சா. – 1 அக்பர்**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நான் வழக்கில் 1ம் பிரதிவாதி. நான் இவ்வழக்கில் யார் யாருக்கு சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் 8 முதல் 10 பிரதிவாதிகளுக்காகவும் சாட்சி சொல்ல வந்துள்ளேன். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 46 ½ செண்ட் பொறுத்து விளம்புகை மற்றும் சுவாதீனம் பரிகாரம் நான் மேற்படி 46 ½ செண்டை பொறுத்து எழுதிக்கொடுத்துள்ள இனாம் மற்றும் கிரைய பத்திரங்கள் செல்லாது என பரிகாரம் கேட்டுள்ளார். தாவா சொத்தின் சர்வே எண் 53/5 ஏ. சர்வே எண். 53/5 ஏல் எவ்வளவு மொத்த விஸ்தீரணம் என்றால் 1 ஏக்கர் 25 செண்ட். மேற்படி 1 ஏக்கர் 25 செண்ட் நான் யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் வள்ளியம்மாள். வள்ளியம்மாள் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தில் சர்வே எண். 53/5 ஏ என எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சர்வே எண். 53/5 ஏ செட்டில்மெண்ட் காலத்தில் 53/2 என இருந்து அதன் விஸ்தீரணம் 9 ஏக்கர் 28 செண்ட் என இருந்து அதிலிருந்து உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண் தான் 53/5 என நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வள்ளியம்மாள் நான் கிரையம் வாங்கிய கிரையப்பத்திரத்தின் பதிவு நகலை பி.வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 3 ஆவணத்தில் சர்வே எண் 53/2 ல் 3 ஏக்கர் 37 ½ செண்ட் என குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் 3 ஏக்கர் 84 செண்ட் என குறிப்பிடுவதற்கு பதிலாக தவறுதலாக 3 ஏக்கர் 37 ½ செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது. வள்ளியம்மாள் கிரையம் கொடுத்த நபரிடம் விஸ்தீரணத்தை பொறுத்து திருத்தல் பத்திரம் எழுதி வாங்கிகொள்ளவில்லை என்றால் சரிதான். வள்ளியம்மாள் தான் கிரையம் பெற்ற 3 ஏக்கர் 37 ½ செண்டில் 90 செண்ட் நிலத்தை 03.12.1981 கிரைய பத்திரத்தின் மூலம் வேலுச்சாமி

என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. வள்ளியம்மாள் 90 செண்ட் கிரையம் கொடுத்த பிறகு யூடிஆர் ல் தவறுதலாக 2.83 ஏக்கருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வள்ளியம்மாளுக்கு 2 ஏக்கர் 13 செண்ட் மட்டுமே யூடிஆரின் போது பதிவாகியிருக்க வேண்டும் என்றும் 2 ஏக்கர் 83 செண்ட்டிற்கு பதிவாகியுள்ளது என்றால் சரியல்ல. வள்ளியம்மாள் யூடிஆரின் அடிப்படையிலும் அதற்கு முன்னால் கிரையம் கொடுத்ததன் அடிப்படையிலும் மொத்தம் 4 ஏக்கர் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் பார்த்தேன். எனக்கு கிரையம் கொடுத்த 1.25 ஏக்கரை யார் பெயரில் கிரையம் போட்டு கொடுத்தார்கள் என்றால் எனக்கும் எனது சகோதரிக்கும் கிரையம் போட்டு கொடுத்தார்கள். நானும் எனது சகோதரியும் தனித்தனியாக 62 ½ செண்ட் என பிரித்துக்கொண்டோம். நானும் எனது சகோதரியும் பாகப்பிரிவினை செய்து கொண்டதற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எனக்கு ஒதுக்கப்பட்ட 62 ½ செண்ட் நிலத்தில் யார் யாருக்கு கொடுத்துள்ளீர்கள் என்றால் எனது மகள் 8 ம் பிரதிவாதிக்கு 5 செண்ட் இடம் இனாமாகவும், 10ம் பிரதிவாதிக்கு 10 செண்ட் கிரையமாகவும், 9ம் பிரதிவாதிக்கு 10 செண்ட் கிரையமாகவும், 11ம் பிரதிவாதிக்கு 11 செண்ட் கிரையமாகவும் கொடுத்துள்ளேன். நான் மொத்தமாக 36 செண்ட் கிரையம் கொடுத்துள்ளேன். மீதியுள்ள இடம் காலியிடமாக உள்ளது என்றால் கட்டிடம் கட்டியுள்ளேன். நான் கட்டிடம் கட்டியுள்ளதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. நான் கிரையம் வாங்கிய 62 ½ செண்ட் நிலத்தில் கிரையம் மற்றும் இனாம் கொடுத்தது போக 26 ½ செண்ட் இடமானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 5 முதல் 12 வரையிலான ஆவணங்கள் எனக்கு பாத்தியப்பட்ட 35 செண்ட் இடத்தில் கட்டப்பட்ட வீடுகளுக்கு செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் மற்றும் மின்சார வரி ரசீதுகள் என்றும் அந்த ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்றும்

சொன்னால் சரியல்ல. வள்ளியம்மாள் தான் கிரையம் பெற்ற இடத்திற்கும் கூடுதலாக வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தினையும் சேர்த்து எனக்கு கிரையம் கொடுத்துவிட்டதால் மீதமுள்ள 23 ¼ செண்ட் காலியிடத்தை நான் வாதியிடம் ஒப்படைக்க கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் செய்து வரும் எதிர்வாதம் செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.